5

# விபசாரத்தைத் தவிர்ப்பது எப்படி

## (மத்தேயு 5:27-32)

*யூத மக்களுக்குக் கூறப்பட்டு இருந்தவற்றிற்கும் அவர்கள் வாழ வேண்டிய முறைக்கும் இடையிலான நேர்மாறுகளின் வரிசை ஒன்றை இயேசு எடுத்துரைத்தார். அவர்கள் - "கொலை செய்யாதிருப்பாயாக" என்ற - ஆறாவது கட்டளையை அறிந்திருந்தனர் (மத்தேயு 5:21; காண்க யாத்திராகமம் 20:13) - ஆனால் கொலையை விளைவிக்கக்கூடிய கோபமான ஒரு சிந்தனையும் தவறனதாக உள்ளது என்று இயேசு வலியுறுத்தினார். பாவம் நிறைந்த செயலுக்குப் பின்னால் உள்ள பாவம் நிறைந்த சிந்தனை ஒன்றின் பின்சென்ற இன்னொரு நேர்மாறுடன் அந்த உதாரணத்தை இயேசு பின்தொடர்ந்ததை நாம் இந்தப் பாடத்தில் காண்போம்.*

*நமது வேதபாட வசனப்பகுதி ஏழாவது கட்டளையுடன் தொடங்குகிறது: "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" (யாத்திராகமம் 20:14; மத்தேயு 5:27). தேவன் உடல்ரீதியான விபசாரத்தை கண்டனம் செய்தார் என்று யூதர்கள் புரிந்துகொண்டிருந்தனர், ஆனால் மனரீதியான விபசாரமும் சட்டப்பூர்வமான விபசாரமும் கூட பாவம் நிறைந்தவையே என்று இயேசு அவர்களுக்குக் கூறினார். இந்தப்பாடத்தை நான், "விபசாரத்தைத் தவிர்ப்பது எப்படி" என்று அழைக்கிறேன்.*

### *உங்கள் இருதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் (5:27-30)*

***உங்கள் சிந்தனைகளைக் கவனியுங்கள் (வசனங்கள் 27, 28)!***

*விபசாரத்தைத் தவிர்ப்பதற்கு உங்கள் இருதயத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நமது வேதபாட வசனப்பகுதி "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" என்று இயேசு கூறுதலுடன் தொடங்குகிறது (வசனம் 27). அவர் ஏழாவது கட்டளையைக் குறிப்பிட்டார். "விபசாரம் செய்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, "வேறொருவரின் துணைவருடன்/துணைவியுடன் சட்ட விரோதமான உடல் உறவு கொண்டிருக்கும்" ஒருவரைப் பொதுவாகக் குறிப்பிடும் (moichos என்ற) வார்த்தையின் வினைச் சொல் வடிவமாக உள்ளது.[1] இருப்பினும் நாம் காணப்போகிறபடி, இவ்வசனப் பகுதியானது பிற்பாடு, பாலுறவு தொடர்பான பாவத்திற்கான இன்னும் அதிகக் கருத்துக்களை உள்ளடக்கிய (porneia என்ற*

வார்த்தையின் ஒரு வடிவத்தை) ஒரு வார்த்தையை பயன்படுத்துகிறது. அனேகமாக நாம், ஏழாவது கட்டளையானது பாலியல் பாவம் எல்லாவற்றையும் கண்டனம் செய்கிறது என்று நினைக்க வேண்டும்,[2] தேவன் அங்கீகரித்துள்ள திருமணத்திற்குப் புறம்பே இருவருக்கு இடையிலான பாலுறவு தொடர்பான உடல் உறவு எதையும் இது கண்டனம் செய்கிறது.

திருமண உறவைப் பாதுகாக்கவே ஏழாவது கட்டளை முதன்மையாகத் தரப்பட்டது, மற்றும் அதற்குக் கீழ்ப்படியாதிருத்தலுக்கான தண்டனை கடுமையானதாக இருந்த (காண்க லேவியராகமம் 20:10; உபாகமம் 22:22-27). விபசாரத்தின் உண்மையான செயல் மாத்திரமே தவறானது என்று யூத போதகர்கள் போதித்தனர் என்பதே பிரச்சனையாக இருந்தது. பத்தாவது கட்டளை, அயலகத்தவரின் மனைவியைக் கவர்ந்து கொள்ளுதலைக் கண்டனம் செய்தது (யாத்திராகமம் 20:17), இது விபசாரத்திற்கு முன்பு ஏற்படும் விருப்பமும் தவறானது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது; ஆனால் யூத போதகர்கள், சட்டவிரோதமான விருப்பத்தின்மீது சிறிதளவே வலியுறுத்தம் வைத்தனர் என்பது தெளிவு.

விபசாரம் செய்தலைப் போன்றே விபசாரத்தை உண்டாக்கும் சிந்தனையும் பாவம் நிறைந்ததாக உள்ளது என்று இயேசு கூறினார்:[3] "நான்[4] உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" (மத்தேயு 5:28). 28ம் வசனத்தைப் பொறுத்தமட்டில், ஆணுக்கு உண்மையாக உள்ளது எதுவோ, அது பெண்ணுக்கும் உண்மையாக உள்ளது[5]. ஒரு ஆணை இச்சையோடு பார்க்கிற எந்தப் பெண்ணும், தன் இருதயத்தில் அவனோடே ஏற்கனவே விபசாரம் செய்திருக்கிறாள். சிந்தனைகளில் இருந்தே செயல்கள் வருகின்றன என்பது இதன் கீழ் உள்ள கொள்கையாக இருக்கிறது (காண்க மத்தேயு 15:19). அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படும் ஒரு பழமொழி பின்வருமாறு கூறுகிறது,

> சிந்தனை ஒன்றை விதைத்தால் செயல் ஒன்றை அறுக்கிறீர்கள்,
> செயல் ஒன்றை விதைத்தால் பழக்கம் ஒன்றை அறுக்கிறீர்கள்,
> பழக்கம் ஒன்றை விதைத்தால் பண்பு ஒன்றை அறுக்கிறீர்கள்,
> பண்பு ஒன்றை விதைத்தால் அடைவிடம் ஒன்றை அறுக்கிறீர்கள்.[6]

உங்கள் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நீங்கள் முதலில் உங்கள் சிந்தனைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நான் இரண்டு உரிமைத் துறப்புகளைக் கூடுதலாகக் கூறுதல் அவசியமாகிறது. முதலாவது, எதிர்ப்பாலினத்தவர் ஒருவரை வெறுமனே கண்ணோக்குதல் பற்றி இயேசு பேசவில்லை. பரிசேயர்களில் மிகவும் கண்டிப்பானவர்கள் "இரத்தம் சிந்தும் பரிசேயர்கள்" என்று அழைக்கப்பட்டனர்.[7] அவர்கள் ஒரு பெண்ணைக் கண்ணால் பார்த்தலைத் தவிர்ப்பதற்காகத் தரையையே பார்த்துக்கொண்டு நடந்ததால் இவ்வாறு அழைக்கப்பட்டனர். இவ்வாறு அவர்கள் தொடர்ந்து, மரங்கள், தூண்கள் மற்றும் சுவர்கள் ஆகியவற்றின்மீது மோதிக்கொண்டனர் - இதன் விளைவாக அவர்கள் நெற்றிகளில் இரத்தம் வழிந்தது. இரத்தம் சிந்தும் முன்னந்தலைகளை இயேசு பரிந்துரைக்கவில்லை. அவர் "ஒரு ஸ்திரீயை *பார்க்கிற* எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" என்று

கூறவில்லை. மாறாக அவர், "ஒரு ஸ்திரீயை *இச்சையோடு*[8] பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" என்றே கூறினார். ஒரு பேச்சாளர், "அழகான மலர் ஒன்றைக் கண்ணோக்குதல் அல்லது அதைப் பாராட்டுதல் கூட தவறு இல்லை. ஆனால் அந்த மலர் உங்களைப் படபடக்கச் செய்யத் துவங்கினால் அதைவிட்டு - விரைவாக - நீங்கிச் சென்று விடுங்கள்!" என்று கூறியதை நான் ஒருமுறை கேள்விப்பட்டேன். ஜான் R. W. ஸ்டாட் என்பவர், "பார்த்தல் மற்றும் இச்சித்தல் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்" என்று எழுதினார்,[9] மற்றும் அவர் அனேகமாகச் சரியானதையே கூறியிருக்கிறார்.

ஒருவர் தமது சொந்த மனைவி அல்லது கணவர் மீது கொண்டுள்ள விருப்பத்தை இயேசு மனதில் கொண்டிருக்கவில்லை என்பது இரண்டாவது உரிமைத்துறப்பாக உள்ளது. அந்த விருப்பம் தேவனால் தரப்பட்டதாகவும் திருமணத்தைப் பலப்படுத்தும் நோக்கங் கொண்டதாகவும் (காண்க ஆதியாகமம் 2:24; மத்தேயு 19:6) மனித இனத்தைப் பெருகச் செய்வதை உறுதிப்படுத்துவதாகவும் (காண்க ஆதியாகமம் 1:27. 28அ) உள்ளது. நமது வேதபாட வசனப்பகுதியில் உள்ள "இச்சை" என்ற வார்த்தை, "பலத்த விருப்பம்" என்று அர்த்தப்படுகிற (*epithumia* என்ற) வார்த்தையில் இருந்து வருகிறது. இவ்வார்த்தை ஒரு நல்ல விருப்பத்தைக் குறிப்பிடக்கூடும், ஆனால் வழக்கமாக - இது இவ்விடத்தில் கொண்டுள்ளபடி - "இது ஒரு மோசமான கருத்தையே" கொண்டுள்ளது.[10] ஒரு தனிநபர், தமது மனைவி அல்லாத, அல்லது ஒருத்தி தமது கணவர் அல்லாத யாரேனும் ஒருவரை இச்சையுடன் பார்த்தலை இவ்விடத்தில் இயேசு குறிப்பிட்டார்.

சிலர், "ஆனால் அது மிகவும் கடினமானதாக உள்ளது. இச்சை நிறைந்த எண்ணங்கள் எனது தலைக்குள் வந்து தாமாகவே வெடிக்கின்றனவே. அதன் மீது நான் உண்மையான கட்டுப்பாடு எதையும் கொண்டிருக்கவில்லையே" என்று கூறி மறுப்புரை தெரிவிக்கிறார். இது ஒரு அறைகூவலாக உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அது இயேசுவின் நாட்களில் இருந்ததைக் காட்டிலும் அதிகம் கடினமாக உள்ளதா என்று நான் அறிவதில்லை, ஆனால் அது நிச்சயமாகவே கடினமாக உள்ளது. நம்மில், மேற்கத்திய உலகத்தில் வாழ்கிறவர்கள், ஒழுக்கவீனமாக "பொழுதுபோக்கினால்" மற்றும் கெடுக்கும் விளம்பரங்களினால் சூழப்பட்டு இருக்கிறோம்.[11] ஊடகம், கிறிஸ்தவ மதிப்பீடுகள் மீது சிறிதளவே அனுதாபம் கொண்டுள்ளது, மற்றும் இணைய வலைத்தளம் ஆபாச இலக்கியத்தால் நிறைந்துள்ளது. ஒருவர் தமது இருதயத்தைச் சுத்தமாகக் காத்துக்கொள்ள முயற்சி தேவைப்படுகிறது - ஆனால் இயேசுவைப் பின்பற்றுதல் குறித்து தனிநபர் ஒருவர் தீவிரமாக இருந்தார் என்றால் அது (இருதயத்தைச் சுத்தமாகக் காத்துக்கொள்ளுதல் என்பது) செய்யப்பட முடியும். தேவபக்தியற்ற சிந்தனைகள் தடைசெய்யப்பட இயலாத வகையில் மனதிற்கு வரும்போது, அவற்றில் தங்கியிராதீர்கள். உங்கள் மனதை ஆரோக்கியமான தலைப்புகளை நோக்கித் திருப்புங்கள் (காண்க பிலிப்பியர் 4:8) மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளில் தீவிரமாய் ஈடுபடுங்கள்.

### தீவிரமான அறுவைச் சிகிச்சை தேவைப்படும் போது (வசனங்கள் 29, 30)

மற்ற ஆலோசனைகள் தரப்படலாம், ஆனால் நாம் இயேசுவின் சிகிச்சையை

நோக்கித் திரும்புவோமாக. 29 மற்றும் 30ம் வசனங்களில் அவரது வார்த்தைகள், அவற்றை முதன்முறை கேள்விப்படும்போது, அதிர்ச்சியூட்டுபவையாக உள்ளன:

> உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும், உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத்தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்.

இது இயேசுவுக்குப் பிரியமான கூற்றாக இருந்தது என்பது உறுதி. இதேபோன்ற மொழிநடையை நீங்கள் மத்தேயு 18:8, 9ல் காண்பீர்கள். கண் என்பது இச்சை என்ற விஷயத்துடன் அடிக்கடி இணைவு கொண்டிருப்பதால் இயேசு தமது விவரிப்பில் கண்ணைப் பயன்படுத்தி இருக்கலாம். யோவான், "கண்களின் இச்சை" பற்றி எழுதினார் (1 யோவான் 2:16). காணுதலுக்கு அப்பால் செயல்படச் செல்லுதலைச் சுட்டிக்காண்பிப்பதற்காக கை என்பது உள்ளடக்கப்பட்டிருக்கலாம்.

"இடறலுண்டாக்கினால்" என்பது "தொடக்கத்தில், வலையில் இரை இணைக்கப்பட்டுள்ள பகுதியின் பெயராக இருந்த" *skandalon* என்ற வேட்டைத் தொழில் தொடர்பான வார்த்தையின் வினைச்சொல் வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [பிற்பாடு] இது வலையையே குறிப்பிட வந்தது.[12] உங்கள் வலது கண்ணோ அல்லது உங்கள் வலது கையோ, மனரீதியான விபசாரத்தில் நீங்கள் அகப்படக் காரணமாக உள்ளது என்றால் அதை நீங்கள் நீக்கிப் போட வேண்டும் என்று இயேசு கூறினார்.

இது பல கேள்விகளைத் தூண்டுகிறது. "இயேசு *வலது* கையையும் *வலது* கண்ணையும் குறிப்பிட்டது ஏன்?" என்பது முக்கியத்துவம் குறைவான ஒரு கேள்வியாக உள்ளது. பெரும்பான்மையான மக்கள் வலது கைப் பழக்கம் உள்ளவர்களாக இருப்பதால், அவர் வலது கையைக் குறிப்பிட்டிருக்கலாம். நம்மில் பெரும்பான்மையானவர்களுக்கு, வலது கை என்பது அதிகம் திறன் உடையதாக உள்ளது மற்றும் அது இல்லையென்றால் நாம் அதிகமானவற்றைத் தவறவிடுவோம். (நான் இவ்வளவு எழுதுகிறவனாக இருக்கையில், எனது வலதுகையை இழந்து எனது இடது கையால் எழுதக் கற்றுக்கொள்ளுதல் என்பது மிகவும் வசதிக்குறைவானதாக இருக்கும்!) மேலும், வேதவசனங்களில் "வலது கரத்தின் பக்கம்" என்பது கனத்திற்குரிய இடமாக உள்ளது (காண்க மாற்கு 16:19; நடபடிகள் 2:33; கொலோசெயர் 3:1).[13] வலது கண்ணைப் பற்றிய விஷயம் என்ன? அது வலது கையுடன் செல்கிறது. உங்கள் வலது கண்ணை மூடிக்கொள்ளுங்கள், அப்போது வலது கையானது அதன் செயல்பாட்டுப் பரப்பில் மட்டுப்படுத்தப் பட்டதாகி விடும். வலது கண்ணையும் வலது கையையும் நீக்கிப்போடுதல் என்பது ஒருவர் செய்ய முடிந்தவற்றைக் கடுமையாகப் பாதிக்கும்.

அது நம்மை மிகவும் முக்கியமான கேள்விக்குக் கொண்டுவருகிறது: "வலது கண்ணைப் பிடுங்கி எறிந்து போடும்படி அல்லது வலது கையைத் தறித்து எறிந்து போடும்படி இயேசு கூறியபோது, அவர் எதை *அர்த்தப்படுத்தினார்?*"

தொடக்ககாலக் கிறிஸ்தவர்களில் சிலர், இயேசுவின் இந்த வார்த்தைகளை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொண்டு, தங்கள் கண்களைத் தோண்டி எடுத்தனர், தங்கள் கைகளை வெட்டிக் கொண்டனர் அல்லது இச்சையைத் தவிர்க்கும் முயற்சியாக மற்ற அறுவைச் சிகிச்சைகளைச் செய்துகொண்டனர் என்று வரலாறு பதிவு செய்துள்ளது. நாம் இயேசுவின் போதனையைப் பலவீனமாக்கும் குற்றம் செய்தவர்களாக இருக்க விரும்புவதில்லை, ஆனால் - குறைந்த பட்சம், பின்வரும் மூன்று காரணங்களினால் - அவரது கூற்று நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ளப்படக் கூடாது என்று நாம் முடிவு செய்கிறோம்:

- ஒரு நேரடியான பொருள்விளக்கம் *செயல்விளைவற்றதாக* இருக்கும்.[14] ஒரு கண்ணை அல்லது ஒரு கையை நீக்கிப்போடுதல் என்பது இருதயத்தில் இருந்து இச்சையை நீக்கிப் போடாது.
- ஒரு நேரடியான பொருள்விளக்கம் *தர்க்கரீதியற்றதாக* இருக்கும். ஒருவர் தமது வலது கண்ணையும் வலது கையையும் நீக்கிப்போட்டால், அவர் இன்னமும் தமது இடது கண்ணையும் தமது இடது கையையும் கொண்டிருப்பார். அவர் இன்னமும் இச்சை நிறைந்த பார்வை மற்றும் இச்சை நிறைந்த செயல் ஆகியவற்றைச் செய்யக்கூடியவராகவே இருப்பார்.
- ஒரு நேரடியான பொருள்விளக்கம் *சீர்பொருத்தம் அற்றதாக* இருக்கும். இது, சரீரமானது பரிசுத்த ஆவியானவருடைய ஆலயமாக உள்ளது மற்றும் அது தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்ற புதிய ஏற்பாட்டின் போதனைக்குச் சீர்பொருத்தம் அற்றதாக இருக்கும் (1 கொரிந்தியர் 3:16, 17; 6:19, 20).

ஆகவே இயேசுவின் வார்த்தைகள் நேரடியான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப் படக்கூடாது - ஆனால் அது அவைகள் *தீவிரமானவையாக* எடுத்துக்கொள்ளப் படக்கூடாது என்று அர்த்தப்படுவதில்லை. அவரது உருவகம், நன்கு அறியப்பட்ட பின்வரும் மருத்துவக் கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது: உடல் முழுவதையும் காப்பதற்காக உடலில் பழுதடைந்த பாகத்தை நீக்குதல். இந்த நடைமுறை இன்றைய நாட்களில் பொதுவானதாக உள்ளது. நீண்ட நாட்களுக்கு முன்பும்கூட, தசை அழுகுதல் ஏற்படத் தொடங்கினால், உயிரைப் பாதுகாப்பதற்கு சிதைவடைந்த உறுப்பு நீக்கப்பட வேண்டும் என்பது பொதுவாக உய்த்துணரப்பட்டது.[15] சிதைவடைந்த உறுப்பு நீக்கப்படாவிட்டால், தசை அழுகல் முழு உடலுக்கு பரவி மரணத்தை விளைவிக்கும். செயல்விளைவில் இயேசு, உங்கள் வாழ்வில் மனரீதியான விபசாரத்திற்கு உங்களை ஒப்புக்கொடுக்கும் உங்கள் வாழ்வின் பங்களிப்பு *எதுவும்* இருந்தால், உங்களுக்கு ஆவிக்குரிய வகையில் தீவிரமான அறுவைச் சிகிச்சை தேவை என்று கூறினார்: அதை உங்கள் வாழ்வில் இருந்து நீக்கிப்போடுங்கள்! ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> இடர்ப்பாடு ஏற்படுத்தும் கண்களை [அல்லது] கைகளை நீக்குதலுக்கான கட்டளையானது ... பேச்சின் நாடகத்துவமான உருவகங்களை நமது கர்த்தர் பயன்படுத்தியதன் உதாரணமாக உள்ளது. நேர்ப்பொருளில்

> உடல்ரீதியாக ஒருவர் தம்மைத்தாமே முடமாக்கிக் கொள்ளுதல் என்பதை அவர் பரிந்துரைக்கவில்லை. ஊனமாக்குதல் அல்ல ஆனால் ஒறுத்து அடக்குதல் என்பதே பரிசுத்தத்தின் பாதையாக உள்ளது என்று அவர் போதித்தார் ...[16]

"ஒறுத்து அடக்குதல்" என்பது "மரணத்தை ஏற்படுத்துதல்" என்பதைக் குறிக்கிறது. வேதாகமத்தின்படி, பவுல் "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை *அழித்தால்* பிழைப்பீர்கள்" என்று கூறினார் (ரோமர் 8:13; என்னால் வலியுறுத்தப்படுகிறது). NASB வேதாகமத்தில் இவ்வசனப் பகுதியில் "ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை *மரணம் அடையச் செய்தால்* நீங்கள் பிழைப்பீர்கள்" என்று வாசிக்கிறோம் (என்னால் வலியுறுத்தப்படுகிறது).[17] அசுத்தமான சிந்தனை கொண்டிருக்கக் காரணமான எந்த விஷயத்தையும் நாம் "மரணம் அடையச்" செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாம், "ஆனால் அந்த விஷயம் எனக்கு மதிப்பு மிக்கதாக இருந்தால் என்ன செய்வது?" என்று கேட்கலாம். வலது கை மற்றும் வலது கண் ஆகியவை இயேசுவின் நாட்களில் மிகவும் முக்கியமானவைகளாக இருந்தாகக் கருதப்பட்டன - இன்றைய நாட்களிலும் அவை இன்றியமையாதவைகளாகவே உள்ளன. உங்கள் வலது கண் அல்லது வலது கை போன்று ஏதேனும் ஒரு விஷயம் மதிப்பு மிக்கதாக இருந்தாலும், அது நீங்கள் அசுத்தமான சிந்தனைகளைக் கொண்டிருக்க ஊக்குவிக்கும் என்றால், அதை நீக்கிப்போடுங்கள் அல்லது அதைத் தவிர்த்து விடுங்கள்.

அது இன்னொரு கேள்வியைத் தூண்டுகிறது: "குறிப்பாக நீங்கள் எந்த விஷயத்தை அல்லது விஷயங்களைப் பற்றிப் பேசுகிறீர்கள்?" நான் பொதுவான ஆலோசனைகளை ஏற்படுத்துகையில், அந்தக் கேள்விக்கு என்னால் உங்களுக்குப் பதில் அளிக்க இயலாது. இயேசு, "உன் வலது கண் *உனக்கு;* ... உன் வலது கை *உனக்கு* இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போடு," இடறலுண்டாக்கினால், அதைப்பிடுங்கி எறிந்துபோடு என்று கூறினார். உங்களுக்கு இடறல் உண்டாக்குவது எது? *நீங்கள்* அசுத்தமான சிந்தனைகளைக் கொண்டிருக்கக் காரணமாவது எது? அது குறிப்பிட்ட சில புத்தகங்களாக அல்லது இதழ்களாக அல்லது மற்ற வெளியீடுகளாக இருக்கலாம்.[18] அது குறிப்பிட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளாக அல்லது திரைப்படங்களாக இருக்கலாம். அது இணைய வலைத்தளமாக இருக்கலாம். அது ஒரு குறிப்பிட்ட தனிநபருடன் அல்லது தனிநபர்களின் குழு ஒன்றுடனான உங்கள் இணைவாக இருக்கலாம் (காண்க 1 கொரிந்தியர் 15:33). அது என்னவாக இருந்தாலும் அதை உங்கள் வாழ்வில் இருந்து நீக்கிப்போட்டு அதைத் தூர எறிந்து விடும்படி இயேசு கூறினார்.

இயேசுவைப் பின்பற்றி இருந்தவர்களில் சிலர், குறிப்பிட்ட சில போதனைகளைப் பற்றி, ஒரு சந்தர்ப்பத்தில் "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்?" என்று கூறினர் (யோவான் 6:60). சிலருக்கு, இச்சை நிறைந்த சிந்தனைகளைத் தூண்டுகிற எந்த விஷயத்தையும் மற்றும் ஒவ்வொரு விஷயத்தையும் அவர்கள் வாழ்வில் இருந்து நீக்கிப்போட வேண்டும் என்ற கருத்து "கடினமான உபதேசமாக" உள்ளது. மத்தேயு 5:29ல் இயேசு, செயல்

விளைவில், உங்களுக்கு மிகவும் முக்கியமானது எது: "உங்கள் கண்ணும் கையுமா அல்லது பரலோகத்திற்குச் செல்லுதலா?" என்றே கேட்டார். இயேசு, "உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்" என்று கூறினார். இதை நாம் தவறவிட்டு விடாதபடிக்கு அவர் இதை இருமுறை கூறினார். நான் நரகத்திற்குச் செல்ல விரும்பவில்லை; நான் அங்கு செல்வதைக் தவிர்ப்பதற்காக நான் எதைவேண்டுமானாலும் செய்வேன்! நீங்களும் அவ்வாறே உணருவதில்லையா? நீங்கள் நகரத்திற்குச் *செல்வதில்லை* மற்றும் நீங்கள் பரலோகத்திற்குச் *செல்லுகிறீர்கள்* என்பதை உறுதிப்படுத்துவதற்கு, தேவையென்றால் எந்த தியாகத்தையும் செய்தல் தகுதியானதாக இருப்பதில்லையா?

நமது சிந்தனைகளைத் தூய்மையாகக் காத்துக்கொள்ளுதல் குறித்து, *நம்மால்* முடிந்தவற்றை நாம் முதலில் செய்வோமாக. நாம் ஒவ்வொருவரும், கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருக்க வேண்டும் என்று பவுல் அறைகூவல் விடுத்தார் (பிலிப்பியர் 2:2; காண்க 4:8). இருப்பினும் நமக்குக் *கர்த்தரிடமிருந்தும்* உதவி தேவைப்படுகிறது. "ஆவியினாலே" நாம் சரீரத்தின் கிரியைகளை அழிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம் (ரோமர் 8:13). தேவனுடைய உதவியுடன் நாம் பாவத்தைக் குறித்து உடனடியாகவும் தீர்மானமாகவும் செயல்பட வேண்டியுள்ளது. அதை *கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கும்படி* இயேசு கூறவில்லை; அதை *வெட்டி எறியும்படி* அவர் கூறினார்![19]

## உங்கள் திருமணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் (5:31, 32)

உங்கள் திருமணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்பது விபசாரத்தைத் தவிர்க்கும் இன்னொரு வழியாக உள்ளது. இயேசு, மனரீதியான விபசாரத்தைப் பற்றிக் கலந்துரையாடிய பின்பு, 31 மற்றும் 32 ஆகிய வசனங்களில் அவர், "சட்டப்பூர்வமான விபசாரம்" என்று நாம் அழைக்கும் விஷயத்திற்குத் திரும்பினார். இந்த வசனங்கள் தனிப்பட்ட நேர்மாறாக இருப்பதாகச் சிலர் நினைக்கின்றனர்; ஆனால் அவைகள், விபசாரம் பற்றிய இயேசுவின் போதனைகளைத் தொடருவதால், அவற்றை இப்போது நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.[20]

இவ்வசனப் பகுதியை நான், சற்றே அச்சத்துடன் அணுகுகிறேன். முதலாவதாக இவ்வசனங்கள், மிகமிக நேரெதிரானவையாக உள்ளன. இரண்டாவதாக, இங்கு கலந்துரையாடப்படும் பாடப்பொருள் மிகவும் உணர்ச்சியுள்ளவையாக உள்ளது. நான் எவரொருவரின் வேதனையையும் கூட்ட விரும்புவதில்லை, ஆனால் நான் "தேவனுடைய ஆலோசனை முழுவதையும் உங்களுக்கு அறிவிப்பதில் இருந்து சுருங்கினால்" தேவனுடைய பேச்சாளர்களில் ஒருவனாக இருத்தல் என்ற எனது பணிப்பொறுப்பிற்கு நான் உண்மையுள்ளவனாக இருக்க இயலாது (நடபடிகள் 20:27).

**கூறப்பட்டுள்ளது என்ன (வசனம் 31)**

இயேசு முதலில், கடந்த காலத்தில் போதிக்கப் பட்டு இருந்தது

என்ன என்பதைப் பற்றிய குறிப்பை ஏற்படுத்தினார்: "தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது" (மத்தேயு 5:31). இது பழைய ஏற்பாட்டில் இருந்து வந்த மிகச் சரியான மேற்கோளாக இருப்பதில்லை, ஆனால் இது பழைய ஏற்பாட்டின் பின்வரும் வசனப் பகுதியின் அடிப்படையில் அமைந்துள்ளது: உபாகமம் 24:1-4. இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்கள் இந்த வசனப்பகுதியைத் தவறாகப் பயன்படுத்தினர். ஒருவன் தன் மனைவியைத் தள்ளி விட விரும்பினால், அவன் செய்ய வேண்டியதெல்லாம், அவளுக்கு தள்ளுதல் சீட்டைக் கொடுத்து அனுப்பிவிடுதல் என்பதே. ஆனால் உபாகமம் 24:1-4ன் நோக்கம் அதுவாக இருந்ததில்லை. இவ்வசனப் பகுதியை ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> "ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக்கொண்டபின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிடலாம். அவள் அவனுடைய வீட்டைவிட்டுப் போனபின்பு, வேறொருவனுக்கு மனைவியாகலாம்.[21] அந்த இரண்டாம் புருஷனும் அவளை வெறுத்து, தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டாலும், அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷன் இறந்துபோனாலும், அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது; ..."

இந்த நான்கு வசனங்களும் நீளமான ஒரே வாக்கியமாக உள்ளன என்பதைக் கவனியுங்கள். தள்ளுதலின் சீட்டு என்பது இருமுறை குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இது முதன்மை நோக்கத்திற்குத் தற்செயலானதாக உள்ளது. 4ம் வசனம் வரையிலும் பிரதான உட்பிரிவு வாக்கியம் அடையப்பட்டு இருப்பதில்லை. ஒரு கணவர் தமது மனைவியைத் தள்ளிவிட்டால், அவர் மீண்டும் அவளைத் திருமணம் செய்துகொள்ளுதல் என்பது ஒருக்காலும் முடியாதிருந்தது என்பதே இவ்வசனப் பகுதியின் வலியுறுத்தமாக உள்ளது.

உபாகமம் 24:1-4 வசனப்பகுதி, விவாகரத்தை ஊக்குவிப்பதற்காகத் தரப்பட்டதா? அது ஒரு மனிதர் விவாகரத்தைப் பெறுவதைச் சுலபமாக்கும் நோக்கம் கொண்டிருந்ததா? இல்லை. வேறொரு இடத்தில் இயேசு, இந்தச் சட்டம் யூதர்களின் பாவம் நிறைந்த தன்மையின் காரணமாகத் தேவனால் அனுமதிக்கப்பட்ட தற்காலிகச் சலுகையாக மாத்திரமே இருந்தது என்று சுட்டிக் காண்பித்தார் (மத்தேயு 19:8). லேரி கால்வின் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> பழைய ஏற்பாட்டின் காலங்களில், யூத ஆண்கள் பெண்களைத் திருமணம் செய்து, அவர்களின் சீதனங்களைச் செலவழித்துவிட்டு, அந்தப் பெண்கள் தங்களைத் தாங்களே ஆதரித்துக் கொள்ளும்படி அவர்களைத் தெருக்களில் அலைய விட்டனர். அதன்பின்பு யூத ஆண்கள் தங்களுக்கு இன்னொரு சீதனத்துடன் இன்னொரு பெண்ணைப் பார்க்கச் சென்றனர்.[22]

பெண்களுக்கு சட்டப் பூர்வமான பாதுகாப்பு சிலவற்றை அளிப்பதற்காகவும் விவாகரத்துச் செய்வதை ஊக்கமிழக்கச் செய்வதற்காகவுமே உபாகமத்தின் இவ்வசனப் பகுதி தரப்பட்டது. இந்தச் சட்டத்தின் குறைந்தது இரண்டு அம்சங்கள் விவாகரத்தை ஊக்கம் இழக்கச் செய்வதாக இருந்திருக்க வேண்டும். (1) தள்ளுதல் சீட்டு எதிர்பார்க்கப்பட்டது. ஒரு கணவர் தமது வீட்டில் இருந்து தமது மனைவியை வெறுமனே எறிந்து விட முடியாதிருந்தது. சட்டரீதியான செயல்பாடு அவசியமாக இருந்தது. (2) ஒரு மனிதர் தமது மனைவியை விவாகரத்துச் செய்து, அவள் மறுதிருமணம் செய்துகொண்டால், அவள் மீண்டும் ஒருக்காலும் அவரது மனைவியாக முடியாது.[23] இவை யாவும், ஒரு கணவர் தமது மனைவியை அவசரமாக விவாகரத்துச் செய்யாதபடிக்கு, இருமுறை யோசிப்பதற்காக வடிவமைக்கப்பட்டிருந்தன என்பது தெளிவு.

**இயேசு கூறியது என்ன (வசனம் 32)**

இயேசுவின் உரையைக் கேட்டவர்களுக்குக் கூறப்பட்டிருந்தது என்ன என்பதில் இருந்து இயேசு, தாம் போதித்தது என்ன என்பதற்குக் கடந்து சென்றார். அவரது அடுத்த வார்த்தைகள், அவர் பேசிய யாவற்றிலும் நேர்மாறு அதிகம் கொண்டவையாக மிளிர்ந்தன: "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன்,[24] அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்" (மத்தேயு 5:32).

இவ்விடத்தில் இயேசுவின் போதனைக்குள் உட்கண்ணோக்கை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு, மத்தேயு 19:3-9ல் உள்ள இதே போதனையின் மீதான மிகநீண்ட பதிப்பைக் கண்ணோக்குதல் உதவலாம். அவ்வசனப்பகுதி, மத்தேயு 5ல் இயேசுவின் வார்த்தைகளைத் தூண்டிய சூழ்நிலைக்குள் ஒரு உட்கண்ணோக்கத் தருகிறது.[25]

பரிசேயர்கள் இயேசுவிடம் வந்து, "புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா?" என்று கேட்டனர் (மத்தேயு 19:3). உபாகமம் 24ம் அதிகாரம், கணவர் தமது மனைவியைத் தள்ளி வைக்க, மனைவியிடம் உள்ள "சில இலச்சையான காரியத்தைக்" குறிப்பிட்டது (வசனம் 1). முதலாம் நூற்றாண்டில் யூத போதகர்களின் ஒரு குழுவினர், அந்த "இலச்சையான காரியம்" பாலுறவில் உண்மையற்ற தன்மையைக் குறித்தது என்று வலியுறுத்தினர். இன்னொரு குழுவினர், இது அப்பம் சுடும்போது கருகிப்போகுதலில் இருந்து வயது முதிர்ந்தவளாக உடல் சுருக்கம் கொண்டவளாகுதல் வரையிலான, கணவரை மகிழ்ச்சியில்லாதவராக்கும் எந்த விஷயத்தையும் இது குறிக்கிறது என்று போதித்தனர். ஆகவே பரிசேயர்கள் இயேசுவினிடத்தில், "புருஷனானவன் தன் மனைவியை *எந்த முகாந்தரத்தினாலாகிலும்* தள்ளிவிடுவது நியாயமா?" என்று கேட்டனர்.

இயேசு, ஆதியாகமம் 1 மற்றும் 2ம் அதிகாரங்களில் இருந்து மேற்கோள் காண்பித்து (மத்தேயு 19:4, 5), தேவன் திருமணத்தைத் தொடக்கத்தில் எவ்வாறு ஏற்படுத்தினார் என்ற விஷயத்திற்குப் பின்னோக்கிச் சென்றதன் மூலம் இதற்குப் பதில் உரைத்தார். அவர் "ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" என்று கூறி முடித்தார் (வசனம் 6). பரிசேயர்கள்,

“அப்படியானால், தள்ளுதற்சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று மோசே ஏன் கட்டளையிட்டார்?” என்று கேட்டனர் (வசனம் 7; என்னால் வலியுறுத்தப்படுகிறது). விவாகரத்து என்பது ஒரு கட்டளையல்ல, ஆனால் ஒரு சலுகையாகவே இருந்தது என்று இயேசு பதில் அளித்தார்: “உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை” (வசனம் 8; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பின்பு இயேசு, நமது வேதபாட வசனப் பகுதியில் நாம் காணுகிறதைப் போன்ற வார்த்தைகளை உரைத்தார் (வசனம் 9).

அந்தப் பின்னணியைச் சிந்தையில் கொண்டவர்களாக நாம், மத்தேயு 5:31, 32ஐக் கண்ணோக்குவோமாக. விதிவிலக்கைச் சற்றுநேரம் காணாத நிலையில் இயேசு, “... தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்;[26] அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்” என்று கூறினார். இவ்வசனப் பகுதியானது, விவாகரத்துப் பெற்ற மனைவி திருமணம் செய்து கொள்வாள் என்று யூகிக்கிறது. அந்த நாட்களில், ஒரு பெண் தனக்குத் தானே ஆதரவு அளிக்க வழிவகை எதுவும் இல்லாதவளாக இருந்தாள். விவாகரத்துப் பெற்ற ஒரு பெண் மறுதிருமணம் செய்துகொண்டால், அவள் விபசாரம் செய்த குற்றமுள்ளவளாக இருப்பாள் மற்றும் அவளை மறுதிருமணம் செய்து கொள்ளும் நபரும் குற்றமுள்ளவராக இருப்பார் என்று இயேசு கூறினார். ஏன்? ஏனென்றால், தள்ளுதலின் சீட்டு கொடுக்கப்பட்டு இருந்தாலும், தேவனுடைய பார்வையில் அவள் இன்னமும் தனது முதல் கணவரின் மனைவியாகவே இருந்தாள்.

மத்தேயு 5ல் இயேசு, விவாகரத்துப் பெற்று மறுதிருமணம் செய்துகொள்ளும் மனைவியைப் பற்றி மாத்திரம் பேசினார். மத்தேயு 19ல் அவர், விவாகரத்துச் செய்துவிட்டு மறுதிருமணம் செய்துகொள்ளும் கணவரைப் பற்றியும் பேசினார். இரு விஷயங்களிலும் அவர்கள் விபசாரம் செய்த குற்றம் உள்ளவர்களாக இருப்பதாக அவர் கூறினார். ஏன்? ஏனெனில் மீண்டுமாக, தேவனுடைய பார்வையில் அவர்கள் இன்னமும் கணவனும் மனைவியுமாகவே இருந்தனர். இயேசுவின் பின்வரும் வார்த்தைகளை நினைவில் வையுங்கள்: “ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்” (19:6; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இப்போது நாம், இயேசு கொடுத்த விதிவிலக்கை ஆழ்ந்து சிந்திப்போம். திருமணம் செய்து கொண்ட ஒரு நபர் விவாகரத்து செய்து மறுதிருமணம் செய்துகொண்டால் அவர் அல்லது அவள் விபசாரக் குற்றம் செய்தவராக இருப்பார். மனிதரீதியான நீதிமன்றங்கள் அந்தச் சட்டத்திற்கு நூற்றுக்கணக்கான விதிவிலக்குகளைக் கொடுத்துள்ளன, ஆனால் இயேசு ஒரே ஒரு விதிவிலக்கை மாத்திரம் கொடுத்தார். NASB வேதாகமம் இதைப் பின்வருவது போன்று சொல்விளக்கப்படுத்துகிறது: “கற்புநெறி தவறுதல் என்ற காரணத்தைத் தவிர.” “கற்பு நெறி தவறுதல்” என்பது “வேசித்தனம்” என்பதற்கான வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: porneia (KJV வேதாகமத்தில் காணவும்). Porneia என்பது பொதுவாக “சட்டவிரோதமான பாலுறவு” என்பதைக் குறிக்கிறது.[27] இது பல கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு சொற்றொடராக

இருக்கிறது, ஆனால் *pornea* என்பது, பாலுறவு என்ற அடிப்படை ஒன்றைக் கொண்டிருக்க, தெளிவற்ற கருத்தில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு மற்றும் ஒவ்வொரு குற்றத்தையும் கொண்டுள்ளது என்று ... விவாதிக்க நாம் சுயாதீனம் கொண்டிருப்பதில்லை."[28] அது உடல்ரீதியான செயல்பாடாக உள்ளது.

அப்படியென்றால் சட்டம் பின்வருமாறு உள்ளது: திருமணம் செய்துகொண்ட ஒரு நபர் விவாகரத்துச் செய்து மறுதிருமணம் செய்துகொண்டால், அவர் அல்லது அவள் விபசாரக் குற்றம் செய்தவராக இருப்பார். திருமணத் துணைவர், இன்னொரு தனிநபருடன் பாலுறவு கொள்ளுதல் என்ற வேசித்தனக் குற்றம் கொண்டிருத்தல் என்பது மாத்திரமே அந்த விதிக்கு ஒரே விதிவிலக்காக உள்ளது.[29]

ஒரு தனிநபர், அவரது அல்லது அவளது திருமணத்துணைவர் உண்மையற்றவராகும் போது அவரை அல்லது அவளை விவாகரத்துச் செய்துவிட வேண்டும் என்று தேவன் *கட்டளையிடுகிறாரா?* பரிசேயர்கள் செய்த அந்தத் தவறைச் செய்து, நாம் குற்றமுள்ளவர்கள் ஆகாதிருப்போமாக. விவாகரத்து பற்றிய போதனை ஒரு கட்டளையல்ல ஆனால் சலுகையாகவே உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் விவாகரத்துச் செய்துகொள்ள *வேண்டும்* என்றல்ல ஆனால் விவாகரத்துச் செய்துகொள்ள *முடியும்* என்றே இயேசு கூறினார். மிகச்சிறப்பான சூழ்நிலைகளில், விவாகரத்து என்பது ஒரு குடும்பத்திற்குப் பேரழிவாக உள்ளது.[30] ஒருவர் விவாகரத்துச் செய்துகொள்ள "வசனரீதியான உரிமை" கொண்டிருந்தாலும், திருமணத்தை மறுபடியும் கட்டி எழுப்ப நல்ல காரணங்கள் இருக்கலாம். விவாகரத்து மீதான எந்த போதனையும், மன்னிப்பு மற்றும் மறு ஒப்புரவாகுதல் ஆகியவற்றின் மீதான போதனையுடன் சமன் செய்யப்பட வேண்டும்.

இவை எல்லாவற்றையும் கூறியுள்ள நிலையில், நமது வேதபாட வசனத்தில், விதிவிலக்கின் மீதல்ல ஆனால் விதியின் மீதே வலியுறுத்தம் உள்ளது என்பதைக் கூறத் துரிதப்படுவதற்கு என்னை அனுமதியுங்கள். திருமணம் *நிரந்தரமானதாக* இருக்க வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். *வாழ்நாள் முழுவதும்* ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பதே திருமணத்திற்குத் தேவனுடைய அடிப்படைத் திட்டமாக உள்ளது.

மத்தேயு 5:31, 32ல் இயேசுவின் வார்த்தைகள் புரிந்துகொள்ளக் கூடாத அளவுக்கு மிகவும் கடினமானவைகளாக இருப்பதில்லை, ஆனால் அவ்வாறு இருந்த போதிலும் அவைகள் கருத்து மாறுபாட்டைத் தூண்டுகின்றன. மக்கள் இவற்றைக் கேள்விப்பட்ட உடனே, "ஆனால் இந்த அல்லது அந்த சூழ்நிலையைப் பற்றிய விஷயம் என்ன?" என்று கேள்வி கேட்கின்றனர். இந்த எடுத்துரைப்பில் நான், கேட்கப்படக் கூடிய எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிக்க முயற்சி செய்யமாட்டேன். மத்தேயு 19:3-9ஐப் பற்றி நான் எழுதியிருக்கிறேன் மற்றும் மக்களைப் பற்றிய விஷயத்தில் ஒரு சில காட்சி அமைவுகளைப் பற்றி நான் கலந்துரையாடியிருக்கிறேன். இருப்பினும் நீண்ட காலத்திற்கு முன்பே நான், திருமண சூழ்நிலையின் ஒவ்வொரு சிக்கலையும் சிக்கறுத்துப் போட எனக்கு வழியொன்றும் இருப்பதில்லை என்பதை அறிந்தேன். ஆண்டுகளினூடே நான், திருமணம், விவாகரத்து மற்றும் மறுதிருமணம் என்பவற்றைப் பற்றிய ஏராளமான சிக்கலான பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளேன். நான் சாலொமோனின் ஞானத்தைக் கொண்டிருந்தாலும், அவை எல்லாவற்றையும் என்னால் திருத்தி

விட முடிந்திருக்காது. நான் எல்லாம் அறிந்தவன் அல்ல என்பது ஒரு காரணமாக உள்ளது. என்ன நடந்தது என்பதை என்னால் துல்லியமாக அறிய இயலாது, மற்றும் மக்களின் மனங்களையும் இருதயங்களையும் நான் வாசித்துப் பார்க்க வழியெதுவும் இல்லை.

ஆகவே நான் [இதைக்குறித்து] எதுவும் செய்யக் கூடாது என்று இது அர்த்தப்படுத்துகிறதா?[31] இல்லை, வசனத்தின் போதகர் மற்றும் பிரசங்கியார் என்ற வகையில் நான், தேவனுடைய வசனம் எல்லாவற்றையும் பிரசங்கிக்கும் கடமையினால் கட்டப்பட்டிருக்கிறேன் - அது மத்தேயு 5:31, 32; 19:3-9 ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது. நாம் எச்சரிக்கையாக இராவிட்டால், சூழ்ச்சிச் சுழல் ஒன்றில் நாம் பிடிக்கப்படக்கூடும். பாடக்கருத்துக்களைப் பற்றி நாம் போதிக்க வேண்டிய வகையில் போதிக்கத் தவறுகிறோம், இதன் விளைவாக நமது மாணவர்களில் சிலர் விவாகரத்து செய்து மறுதிருமணம் செய்துகொள்கின்றனர். பின்பு நாம், விவாகரத்துச் செய்யப்பட்டவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தி விட்டோமோ என்று பயம் நிறைந்தவர்களாகிறோம், எனவே நாம் இந்தத் தலைப்பு பற்றி இன்னும் குறைவாகப் போதிக்கிறோம். இதன் விளைவாக இன்னும் அதிகமானவர் வசனரீதியில் இல்லாத விவாகரத்துக்களைப் பெறுகின்றனர். இந்தச் சுழற்சி இன்னும் செல்லச் செல்ல, இன்னும் கீழாக அமிழ்த்துவதாகி விடுகிறது. திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமானதாக இருக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டார் என்பதை நமது இளைஞர்கள் அறிந்து கொள்ளாமலேயே வளருகின்றனர் என்பது இதன் விளைவுகளில் ஒன்றாக உள்ளது. சபையின் எல்லா நடத்துனர்களுக்கும் நான் பின்வருவதை வற்புறுத்திக் கூறுகிறேன்: மத்தேயு 5:31, 32; 19:3-9ல் வரைகுறிப்பிட்டுள்ளபடி திருமணத்திற்கான தேவனுடைய அடிப்படைத் திட்டத்தை உங்கள் பிரசங்கியார்களும் போதகர்களும் முன்வைக்கும்படி வலியுறுத்துங்கள்.

திருமணத்தின் நிலைப்புத் தன்மையின் மீதான போதனையுடன் கூடுதலாக, தேவபக்தியுள்ள மற்றும் அன்பு நிறைந்துள்ள கிறிஸ்தவ இல்லத்தைக் கொண்டிருத்தல் எவ்வாறு என்பது பற்றிய அறிவுறுத்துதல்களையும் நாம் தருவது அவசியமாக உள்ளது. மற்றும் நாம், திருமணத்தில் பிரச்சனைகள் கொண்டுள்ள தம்பதியருடன் ஊழியம் செய்வதும் அவசியமாக உள்ளது. மேலும் நாம், விவாகரத்தினால் வீணாக அழிக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆறுதலையும் அளிக்க வேண்டும். பவுல், "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:2). மீண்டும் அவர், "திடனற்றவர்களைத் தேற்றுங்கள்" என்றும் கூறினார் (1 தெசலோனிக்கேயர் 5:14).

சபை நடத்துனர்கள் அவ்வப்போது, திருமணத்திற்கான தேவனுடைய வடிவமைப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது தெளிவாக உள்ள திருமண சூழ்நிலைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. கொரிந்து நகரில் இருந்த சபையில் ஒரு மனிதர் தமது தந்தையின் மனைவியை[32] வைத்துக் கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 5:1). அந்த விஷயத்தில் பவுல், அம்மனிதரை ஐக்கியத்திலிருந்து நீக்க வேண்டும் என்று சபைக்குழுமத்தை ஊக்குவித்தார் (வசனங்கள் 3-5, 7, 11). இருப்பினும் பல சூழ்நிலைகளில், ஏற்புடைய நடவடிக்கை என்பது அவ்வளவு தெளிவானதாக இருப்பதில்லை. அப்படிப்பட்ட நிகழ்வுகளில், நடத்துனர்கள்

ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும் (யாக்கோபு 1:5) மற்றும் அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பானவற்றைச் செய்ய வேண்டும். நிறைவான பொறுப்பு அந்தத் தனிநபர் மீது உள்ளது. நாம் போதிக்கவும் பிரசங்கிக்கவும், ஆற்றுப்படுத்தவும் ஆலோசனை கூறவும் முடியும், ஆனால் தேவனுடைய வசனத்தைத் தத்தமது சொந்த வாழ்வில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொருவரும் பொறுப்புக் கொண்டிருக்கிறோம். ரோமர் 14:12, "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" என்று கூறுகிறது.

திருமணத்தின் நிலைப்புத்தன்மை பற்றியும் வேதவசனரீதியற்ற விவாகரத்து விபசாரத்தில் முடிகிறது என்ற உண்மை பற்றியும் இயேசு பலமாகப் போதித்தார். இருப்பினும் அவர், எழக்கூடிய ஒவ்வொரு சூழ்நிலையையும் சட்டப்பூர்வமாக்க முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை. அவர் அடிப்படைக் கொள்கைகளைக் கொடுத்து அந்தக் கொள்கைகளை நமது வாழ்விலும் நாம் கண்டறியும் பல்வேறு திருமணச் சூழ்நிலைகளிலும் நடைமுறைப்படுத்துதலை நம்மிடத்தில் விட்டுவிட்டார். இது என்ன ஒரு பயங்கரமான பொறுப்பாக உள்ளது! தேவனுடைய சித்தத்தை அறியவும் அதன்படி செய்யவும், நம்மில் ஒவ்வொருவருக்கும் புரிந்துகொள்ளுதலையும், உட்கண்ணோக்கையும் மற்றும் தைரியத்தையும் தேவன் அருளுவாராக!

மத்தேயு 5:31, 32ஐப் பற்றிய நமது கலந்துரையாடலை நான் ஒரு எதிர்மறைக் குறிப்புடன் முடிக்க விரும்பவில்லை. விவாகரத்து மற்றும் மறுதிருமணம் பற்றிப் பதில் அளிக்கப்படாத கேள்விகளுடன் நாம் இந்த வசனப் பகுதியைக் கடந்து சென்றால், நாம் இதன் உண்மையான அர்த்தத்தையும் தனிச்சிறப்பையும் உணரத் தவறிவிடுகிறோம் என்று கூறப்பட்டுள்ளது. விவாகரத்துச் செய்தலை ஊக்கம் இழக்கவைத்து திருமணத்தைப் பாதுகாத்தல் என்பதே இயேசுவின் நோக்கமாக இருந்தது. ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்பதே, திருமணத்திற்கான தேவனுடைய திட்டமாக உள்ளது. இது பெறத் தகுதியுள்ள வலியுறுத்தத்தை ஏதேனும் ஒரு வகையில் தர அறிதலை நான் விரும்புகிறேன். நான் ஒரு நாற்காலியில் நின்றுகொண்டு பின்வருமாறு உரக்கச் சொல்வதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்: *"வாழ்நாள் முழுவதற்கும் ஒரு ஆணுக்கு ஒரு பெண் - அதுவே திருமணத்திற்கான தேவனுடைய திட்டம்!"* இந்தத் திட்டத்திற்கு நாம் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறோமோ அவ்வளவு அதிகமாகத் தேவன் கனப்படுத்தப்படுவார் மற்றும் நமது வாழ்வும் அவ்வளவு அதிகமாக ஆசீர்வதிக்கப்படும்.

## முடிவுரை

நமது பாடமானது பின்வரும் சுவையற்ற தலைப்பின் மீது மையங்கொண்டு இருந்துள்ளது: விபசாரம், பாலுறவுரீதியான பாவம். இந்தப் பாவத்தைப் பொறுத்த மட்டில், இதைத் தவிர்த்தல் என்பதே இதைக் கையாளும் மிகச்சிறந்த வழியாக உள்ளது. இதைத் தவிர்ப்பதற்கு, நமது வேதபாட வசனப் பகுதி இரு வழிகளை ஆலோசனையாகத் தெரிவிக்கிறது. முதலாவது உங்கள் இருதயங்களில் இருந்து அசுத்தம் நிறைந்த சிந்தனைகளை நீக்கிப்போடுவதன் மூலம் உங்கள் இருதயங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இரண்டாவது, உங்கள் திருமணத் துணைவருக்கு/துணைவிக்கு உண்மையாயிருந்து திருமணத்தின் நிலைப்புக்

*தன்மைக்கு உங்களை ஒப்புக்கொடுத்தலின் மூலம் உங்கள் திருமணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.*

*உடல்ரீதியான விபசாரத்தைப் பற்றி மாத்திரமல்ல, ஆனால் மனரீதியான விபசாரம் மற்றும் சட்டப்பூர்வமான விபசாரம் ஆகியவற்றைப் பற்றியும் நாம் கவலையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று இயேசு போதித்தார். உலகப் பிரகாரமான சிந்தை கொண்டவர்கள், விபசாரத்தின் எந்த வடிவத்தைப் பற்றியும் கவலை கொள்வதில்லை, ஆனால் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பவர்கள் அதைப் பற்றிக் கலவை கொண்டுள்ளனர். பவுலைப் பொறுத்த மட்டில், பாலுறவு ரீதியான பாவம் என்பது, தேவனுடைய பார்வையில் குறிப்பாக மிகவும் வெறுக்கத் தக்கதாக உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 6:18). இருப்பினும் - விபசாரம் என்ற பாவம் எவ்வளவு மோசமானதாக இருப்பினும் - மற்ற எந்தப் பாவத்தையும் போன்றே, ஒருவர் அதிலிருந்து மனந்திரும்பினால், அது அவருக்கு மன்னிக்கப்படும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். 1 கொரிந்தியர் 6ல் பவுல், "வேசிமார்க்கத்தார்" மற்றும் "விபசாரக்காரர்" ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்ட பின்பு (வசனம் 9), "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்று கூறினார் (வசனம் 11; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நீங்கள் விபசாரம் என்ற பாவத்தின் எந்த வடிவத்துடனாவது - அல்லது வேறு எந்த பாவத்துடனாவது - போராடிக் கொண்டிருந்தால், நாங்கள் உங்களுக்கு உதவ முடியும், அதை எங்களுக்குத் தெரிவியுங்கள்.*

---

குறிப்புகள்

[1]W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 14. [2]*சிலர், பத்துக் கட்டளைகளுக்குப் பின்னால் மோசேயினால் கொடுக்கப்பட்ட பல பிரமாணங்கள், அந்த அடிப்படைக் கட்டளைகளின் விரிவாக்கமாக உள்ளன என்று நம்புகின்றனர். விஷயம் அப்படி இருந்தால், "விபசாரஞ் செய்யாதிருப்பாயாக" என்பது திருமணமான நபர் ஈடுபடும் பாலுறவு தொடர்பான பாவத்தைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது, ஏனென்றால் பின்தொடரும் பிரமாணங்களில், பாலுறவு தொடர்பான பாவங்களில் பல வகைகள் உள்ளடங்குகின்றன (காண்க யாத்திராகமம் 22:16, 17, 19).* [3]*தமது இருதயத்தில் காமம் கொண்டுள்ள ஒருவர் சற்று முன்சென்று விபசாரம் செய்யலாம் என்ற தவறான கருத்தை மறுபடியும் கையாள நீங்கள் விரும்பலாம்.* [4]*கிரேக்க வசனத்தில், "நான்" என்ற வார்த்தையின் மீது வலியுறுத்தம் உள்ளது.* [5]*தேவன் பாரபட்சம் காண்பிப்பதில்லை (காண்க நடபடிகள் 10:34).* [6]Samuel Smiles, *Bartlett's Familiar Quotations,* 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown and Co., 1992), 781. [7]E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 148. [8]*கிரேக்க வசனமானது, "விருப்பம் [இச்சை] கொண்ட கண்ணோக்குடன்" என்ற நேரடி அர்த்தம் தருகிறது.* (Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament,* 2d ed. [London: Samuel Bagster & Sons, 1958], 12). [9]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 87. [10]Vine, 384.

[11]*இந்தப் பத்தியை, நீங்கள் வாழும் சமூகத்திற்குப் பொருத்தமான வகையில்*

*தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [12]Vine, 441. [13]*"அவர் எனக்கு வலதுகையாக இருக்கிறார்" என்ற சொல் விளக்கம், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமானதாக இருந்தால், நீங்கள் அதைப் பயன்படுத்த முடியும்.* [14]Clovis G. Chappell, *The Sermon on the Mount* (Nashville: Abingdon-Cokesbury Press, 1930), 157 [15]*"தசை அழுகல்" என்பது நோய்த்தொற்று அல்லது இரத்த ஓட்டத்தில் குறைபாடு என்பதினால் ஏற்படக்கூடிய தசை இறப்பு (அது அடிக்கடி கறுப்பாக மாறுகிறது ) என்ற நிலையைக் குறிக்கிறது. கடந்த காலத்தில், அழுகிய பகுதியை நீக்குவதற்கு, பாதிக்கப்பட்ட உறுப்பை அறுவைச் சிகிச்சை செய்து நீக்குதல் உட்பட, பல்வேறு முறைகள் பயன்படுத்தப்பட்டன.* [16]Stott, 89. [17]*கொலோசெயர் 3:5, "ஒறுத்து அடக்குதல்" அல்லது "மரணம் அடையச் செய்தல்" என்பதைக் குறிப்பிடும் இன்னொரு வசனமாக உள்ளது (*KJV; NASB *ஆகிய வேதாகமங்களில் காணவும்).* [18]*இந்தப் பத்தியை நீங்கள் வாழ்ந்து ஊழியம் செய்யும் சூழ்நிலைக்கு ஏற்பத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [19]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 24. [20]*இந்தப் பகுதியானது, முந்திய வசனத்தின் ஆய்வுக் கருத்தினுடைய தொடர்ச்சியாக இருக்கலாம் என்பதைப் பல் வேறு காரணிகள் சுட்டிக்காண்பிக்கின்றன: (1) 31ம் வசனம் மற்ற பகுதிகளில் தொடக்க வார்த்தைகளைப் போன்று தொடங்குவதில்லை; (2)* KJV *வேதாகமத்தில் 27 முதல் 32 வரையுள்ள வசனங்கள் தனிப் பத்தியாக உள்ளன; (3) குறிப்பிட்டபடி அவைகள் விபசாரம் பற்றிய இயேசுவின் போதனைகளைத் தொடருகின்றன.*

[21]*உபாகமம் 24:2ல், அவள் மறுபடியும் திருமணம் செய்துகொள்வாள் என்று யூகிக்கப்பட்டது, ஏனெனில் திருமணம் இல்லாது இருக்கிற ஒரு பெண் தன்னை ஆதரிக்க வேறு வழியற்றவளாக இருப்பாள்.* [22]Larry Calvin, *The Power Zone* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 85. [23]*இந்த அளிப்பு இன்றும் நடைமுறையில் இருப்பதாகச் சிலர் நம்புகின்றனர். இந்த விலக்கு பழைய ஏற்பாட்டில் உள்ளது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.* [24]*இதற்கு இணை வசனமாக மாற்கு சுவிசேஷத்தில் உள்ள வசனப் பகுதியானது ஒரு மனைவி தனது கணவரை விவாகரத்துச் செய்தலை உள்ளடக்குகிறது (மாற்கு 10:12). இந்தப் பாடத்தில் முன்பு குறிப்பிடப்பட்டபடி, இந்தக் கொள்கைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் நடைமுறைப்படுகின்றன.* [25]*நாம், மத்தேயு 19:3-9ஐ விபரமாகப் படிக்க மாட்டோம். மத்தேயு 5:31, 32ஐப் பற்றிய மிகச்சிறந்த புரிந்து கொள்ளுதலுக்கான பின்னணியை அளித்தல் என்பதே எனது நோக்கமாக உள்ளது.* [26]*மத்தேயு 5:31, 32ல் இயேசு, இவ்விஷயத்தில் கணவரின் குற்றமுள்ள தன்மையை வலியுறுத்தினார். விவாகரத்து பெற்ற மனைவி மறுதிருமணம் செய்தால் அவள் விபசாரம் செய்த குற்றமுள்ளவளாக இருந்தாள், ஆனால் அவளை விவாகரத்துச் செய்த கணவர், அவள் மறுதிருமணம் செய்தால் ஒழிய ஆதரவற்ற நிலையில் இருக்கும் கடினமான நிலைக்குத் தள்ளும்படி அவளை விவாகரத்துச் செய்ததனால் குற்றம் உள்ளவராக இருப்பார். ஆக, இவ்விருவருமே தேவனுடைய பார்வையில் குற்றம் உள்ளவர்களாக இருந்தனர்.* [27]Vine, 252. [28]Stott, 97. [29]*மாற்கு 10:11, 12 மற்றும் லூக்கா 16:18 ஆகிய வசனங்கள், அந்த விதிவிலக்கைக் குறிப்பிடுவது இல்லை என்பதால், விவாகரத்திற்குச் சட்டப்பூர்வமான காரணம் எதுவும் இல்லை என்று சிலர் நினைக்கின்றனர். ஒரு பாடக்கருத்தின்மீது தேவன் கூறிய எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுதல் என்பதே வேதாகம வசன விளக்கத்திற்கு அடிப்படைக் கொள்கையாக உள்ளது. மத்தேயு 5:32 மற்றும் 19:9 ஆகிய இருவசனங்களுமே அந்த விதிவிலக்கைத் தருகின்றன.* [30]*இது, தேவன் விவாகரத்தை வெறுப்பதாகக் கூறியுள்ளதற்கான காரணங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது நிச்சயம் (மல்கியா 2:16).* [31]*இந்தக் குறிப்புகள் பொதுவானவையாக*

*இருந்தாலும், ஒருசில விவாகரத்துக்களைக் காட்டிலும், விவாகரத்து சாதாரணமானதாக உள்ள ஒரு சமூகத்திற்கு மிகவும் பொருத்தமானவையாக உள்ளன. நீங்கள் ஊழியம் செய்யும் பகுதியில் உள்ள சூழ்நிலைக்குப் பொருத்தமான வகையில் பாடத்தின் இந்தப் பகுதியை விரிவாக்கிக் கொள்ளுங்கள். [32]இங்கு விவாதிக்கப்படும் பெண் அம்மனிதரின் சிற்றன்னையாக இருந்தார் என்று பொதுவாக யூகிக்கப்படுகிறது.*